**CC 258/2005 Dt: 27.09.2024** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.34**

**அ.சா.6 திரு. காளிதாசன், த.பெ. தங்கவேல் என்பவரின் முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. நான் சென்னையில் மாநில குற்றப்பிரிவு புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணியாற்றியபோது விசாரணை செய்யப்பட்ட குற்ற எண். 15/2002 வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் ராஜமாணிக்கம் மற்றும் ஜாக்கி என்கின்ற ஆறுமுகம் ஆகியவர்களின் ஒப்புதல் வாக்குமூலம் குறித்தும், அவர்களிடமிருந்து கைப்பற்றிய ஆவணங்கள் மற்றும் Fascmile முத்திரைகள், அவை சம்மந்தப்பட்ட மகஜர்கள் குறித்து ஏற்கனவே 28.09.2012ல் எனது சாட்சியத்தை இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். நான் புலன் விசாரணை செய்த மேற்படி வழக்கில் எதிரி ஜாக்கி என்கின்ற ஆறுமுகம் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மகஜரில் சொல்லப்பட்ட வரிசை எண். 21, 23, 96 மற்றும் 99 இவைகளில் கண்ட Fascmile முத்திரைகள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளர் என்னை சென்னை அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

2.ஆறுமுகம் இவ்வழக்கில் சாட்சியாகவோ, எதிரியாகவோ சேர்க்கப்படவில்லை என்ற விவரமும் தெரியுமா என்றால் தெரியாது. 09.01.2004 அன்று ராஜமாணிக்கம் இறந்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் ஆய்வு செய்த Fascmile முத்திரை மற்றும் மகஜர் ஆகியவை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தஞ்சாவூர் குற்ற வழக்கில் விசாரித்த ஆய்வாளருக்கு தான் தெரியும். நான் முதல் விசாரணை சொல்லியுள்ள விவரங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதவை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/-திருமதி. எஸ்.சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.